[1975 அக்டோபர் 28

சாமல்பட்டி—விருதுவிளங்கினுன் பேருந்துப்பணி

*104. வினு—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாமல்பட்டியிலிருந்து திருவண்ணுமலே வழியாக விருது விளங்கினுன் கிராமத்திற்குச் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து நிறுத்தப்பட்டு விட்டதா?

(இ) ஆம் எனில், அந்த வழித்தடத்தில் புதிய பஸ் விடுவதற்கு அனுமதி அளிக்கும் செயற்குறிப்பு ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) இல்லே.

திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன் : தலேவரவர்களே, ஏற்கனவே அந்த விருதுவிளங்கினுன் பகுதியில் 10 கிராமங்களுக்கு மேலிருக்கின்றன. நீண்ட காலம் முயற்சித்துத் தனியார் பஸ்ஸுக்கு ஏற்பாடு செய்து கொண்டுவந்தோம். தற்சமயம் 5 மைலுக்கு இந்தப் புறத்திலேயே பஸ்ஸை நிறுத்திவிடுகிருர்கள். எனவே, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்தை யாவது விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைத் தந்தைபெரியார் போக்குவரத்துக் கழகம் ஆராயும்.

மையப் பேருந்து நிலேயம் — மதுரை கிழக்கு இரயில் நிலேயம் பேருந்துப்பணி

*105. வினு—திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகரில், மத்திய பேருந்து நிலேயத்திற்கும், கிழக்கு மதுரை இரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையே பேருந்துப் பணியினேத் தொடங்கக் கோரி பாண்டியன் போக்கு வரத்துக் கழகத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

1975 அக்டோபர் 28]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஆம். மதுரை, மையப் பேருந்து நிலையத்திலிருந்து கிழக்கு ரயில் நிலையம்வரை தனியாக நகரப் பேருந்து ஒன்று விடுவதற்கு உண்மையாகவே தேவை யில்லை என்று பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம் கருது கிறது. மையப் பேருந்து நிலையத்திற்கும் கிழக்கு மதுரை இரயில் நிலையத்திற்கும் இடையே காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையிலும் மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையிலும் தேவைப் படுமேயானல் நெரிசல் நேரப் பேருந்துகள் விடுவது குறித்து இக் கழகம் ஆராயும்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: இப்போழுது கிழக்கு இரயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் மிகப்பெரிய பல தியேட்டர்களும், காமராஜர்புரம், இந்திரா நகர் போன்ற ஏழைகள் வாழக்கூடிய பல பகுதிகளும் இருக்கின்றன. அவர்க ளெல்லாம் போக்குவரத்துக்குக் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னபிறகு இப்பொழுது ஒரு பஸ்ஸை அரேஞ்ச் பண்ணி யிருக்கிறார்கள். ஆனல் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தேவையில்லை என்று சொல்லியிருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. உண்மையிலே அங்கு மிகமிக அவசியமாகத் தேவைப்படுகிறது. அதை ஆராய்ந்து, பாண்டியன் பஸ் போக்கு வரத்துக் கழக பஸ்களை விட அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அந்த, வழித் தடத்தில் நிறைய நெரிசல் இல்லை. போக்குவரத்து பஸ்களை அதிகமாக விட்டாலும் ஆட்கள் இல்லை. ஆகவேதான், பாண்டியன் போக்குவரத்துக் கழகம் அதை ஆராய்ந்து, சில பஸ்களை மட்டும் விட்டுக் கொண்டிருக்கிறது. அதிகப் பேருந்துகளை விட வழியில்லையென்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அந்தக் கிழக்கு மதுரைப் பகுதியிலே ஏற்கனவே 4-ம் நெம்பர் பஸ் போய்க் கொண்டிருக் கிறது. ஆனல், அதில் அதிகக் கூட்டமிருக்கிறது. ஆகவே,

அந்தப் பகுதிக்குப் போக 4-எ என்று இன்னொரு பஸ் விட்டால் உதவிகரமாக இருக்கும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே பாண்டியன் போக்குவரத்துக் கழகம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது என்று சொன்னேன். ஆராய்ச்சியிலே வந்த முடிவு, அதிக நெரிசல் இல்லையென்பது. பஸ்களுக்குப் போதுமான பயணிகள் கிடைக்கவில்லையென்று சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் வேண்டுமானால் ஆராய்ந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஓடிக்கொண்டிருக்கிற இடங்களிலே பஸ்களை நிறுத்தலாமா?

It is against the interests of the public

அந்தக் கொள்கையை அரசாங்கம் கைவிடுமா? இனிமேல், புதிதாக வேண்டுமானால் அவ்வாறு செய்யலாம். ஆகவே, ஓடிக் கொண்டிருக்கிற இடங்களில் நிறுத்துவது

against the interest of the public

என்ற வகையில் காலதாமதம் செய்யாமல் மீண்டும் பஸ்களை விடுவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அந்த இடத்திலே ஓடிக் கொண்டிருந்ததை நிறுத்தவில்லை. ஆகவே, கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]